

சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர்கள் / மண்டல மேலாளர்கள், தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன அலுவலர்கள், கூட்டுறவுத் துறையின் பொது விநியோக பதிவாளர்கள், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்ய பிரத சாகு. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் அ. சண்முகசுந்தரம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த. மோகன், கூட்டுறவுத் துறை கூடுதல் பதிவாளர் சா.பட அம்ரித், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு காவல் துறைத் தலைவர் ரூபேஷ்குமார் மீனா, உணவுப் பொருள் வழங்கல் துறை துணை ஆணையாளர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர்கள் / மண்டல மேலாளர்கள், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன அலுவலர்கள், கூட்டுறவுத் துறையின் பொது விநியோகத் திட்டத் துணைப் பதிவாளர்கள், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை காவல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட மோட்டார் வாகனத்தை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வழங்கினார். உடன் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, திருச்செந்தூர் ஒன்றியச் செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகரச் செயலாளர் வாள் சுடலை, கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 84வது நாள்!

## வில்லிவாக்கம் மேற்கு – கிழக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, மே 15-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 84வது நாள்

வில்லிவாக்கம் மேற்கு கிழக்கு பகுதி - இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 84 ஆம் நாளான - கழகத்தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு இன்று (14.5.2025) வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 95- (அ) கொய்யா தோப்பு வில்லிவாக்கம், 2) வட்டம் 104 - (ஆ) நாவலர் நகர், சென்னை சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ் நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே. வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வ வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய்,எம். சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமா சங்கர், சொ.முருகேசன், ப. லோகுபாபு, ஜெ.தங்கராஜ், எ.வேதா, சீ.வீக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### நகரச் செயலாளர் கண்டோன்மெண்ட் டி.பாபு தலைமையில்

# கண்டோன்மெண்ட் நகர தி.மு.க. சார்பில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## ஈகை கோ.தனசேகரன் – டி.ஆர்.பாலு எம்.பி – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

காஞ்சிபுரம், மே. 15 - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கண்டோன்மெண்ட் நகர தி.மு.க. சார்பில் "நாடுபோற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு" கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (15.5.2025 - வியாழக்கிழமை) மாலை 6 மணிக்கு, கரையார் கோயில் தெரு, பட்ரோடு, பரங்கிமலையில் நடைபெறுகிறது.

கண்டோன்மெண்ட் நகரச் செயலாளர் டி.பாபு தலைமை வகிக்கிறார்.

எஸ்.ஆனந்தராஜ், ஆர். கோவிந்தராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

என்.மோகன், ஜெ. கவிச்சக்ரவர்த்தி, எம். தமிழ்ச்செல்வி, சி.முத்து, எம்.கே.பி.நாராயணன், கே.மாறன், பி.தினகரன், பி.ஸ்டீபன்பால், வி.வேலு, எம்.ஜெய்கணேஷ், என். வி.விஜயசங்கர், கே.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் ஈகை கோ.தனசேகரன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா. மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர். எஸ்.பாரதி, மீ.அ. வைத்தியலிங்கம், கோ.காமராஜ், பி.குணாளன், என்.சந்திரன், த.ஜெயக்குமார், அ. தமிழ்மாறன், கோல்டு டி. பிரகாஷ், கி.சுதாகர், கே.சி.எஸ்.ராஜேந்திரன், டி.ஆரோக்கியராஜ், பி.ஆகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள், அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.சுனில் பால்ராஜ், நகர மாணவர் அணி அமைப்பாளர் எம். பி.மகேஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.




பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பாக நாடு போற்றும் நான்கு ஆண்டு தொடரட்டும் பல்லாண்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் ஜமீன் பல்லாவரம் பகுதியில் பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயலாளர் மண்டல தலைவருமான இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் பல்லாவரம் இ. கருணாநிதி எம்எல்ஏ தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., க.ஒப்பிலாமணி மா. பூபதி ஆகியோர் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார்கள். பல்லாவரம் தெற்கு பகுதி கழக செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன் பொதுக்குழு உறுப்பினர் மு. ரஞ்சன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் பகுதி கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக செயலாளர் கழக நிர்வாகிகள் ஏராளமானவர் திரண்டு இருந்தனர்




திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் நான்காம் ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் புஜ்ஜி.டி.ராமகிருஷ்ணன் தலைமையில் கரிக்கலவாக்கம் ஊராட்சியில் நடைபெற்றது. இதில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை குறித்து சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் உடன் தலைமை பேச்சாளர் எஸ்.கே.ஸ்ரீராம், த.எத்திராஜ், எம்.பர்க்கத்துல்லகான், எஸ். மனோகரன், விமலகுமார், மதுரை வீரன், வேலாயுதம், முகம்மது ராபி, டி.முரளிகிருஷ்ணன், டி.எம்.எஸ். வேலு, கபிலன், முருகேசன், பாஸ்கர், ரவி, பாலன், ரமேஷ், ரவி, பலராமன், ஜஸ்டின் பால், சஞ்சய், சதீஷ், கமல், அஜித் குமார், அருண், ரஜினி காந்த், வசந்தி, ஷோபனா, உள்பட பலர் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 15.05.2025 | திண்டுக்கல் கிழக்கு | ஆத்தூர் | அகரம், தாடிக்கொம்பு பேரூராட்சி. | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, செல்வக்குமார் |
| 2 | 16.05.2025 | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் | கள்ளிமந்தையம் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, மில்லர் மண்டேலா |
| 3 | 17.05.2025 | வேலூர் | வேலூர் | அண்ணா கலையரங்கம் அருகில் | வழக்கறிஞர் தாயகம் கவி, எம்.எல்.ஏ., ரிஷி சந்தோஷ் |
| 4 | 18.05.2025 | வேலூர் | குடியாத்தம் | பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில் | மாண்புமிகு கோவி.செழியன், ம.ஜ.சந்தீப் |
| 5 | 18.05.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | மருத்துவர் ப.மீ.யாழினி, சி.கா.சுகன்மந்த்ரன் |

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

இராமநாதபுரம் மற்றும் சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | இராமநாதபுரம் | பீமாஸ் வைஸ்ராய் ஹால், பாரதி நகர், இராமநாதபுரம். |
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | சென்னை வடகிழக்கு | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல் கீழ்க்கண்ட 6 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 17.05.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | எழும்பூர் | அறிஞர் அண்ணா மாளிகை, சச்சிதானந்தம், 2–வது தெரு, கொசப்பேட்டை, சென்னை–12. |
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | வில்லிவாக்கம் | டபிள்யூ.பி.ஏ.சவுந்திர பாண்டிய நாடார் பள்ளி வளாகம், என்.எம்.கே.தெரு, அயனாவரம், சென்னை–23. |
| | | திருவொற்றியூர் | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |
| 19.05.2025 திங்கள்கிழமை | மாலை 4.00 மணி | விருகம்பாக்கம் | கோல்டன் பேரடைஸ் திருமண மண்டபம், சாலிகிராமம், சென்னை–93. |
| 20.05.2025 செவ்வாய்க்கிகிழமை | மாலை 4.00 மணி | மதுரவாயல் | ஸ்ரீ ராஜலட்சுமி மகால், 4, பிள்ளையார் கோயில் தெரு, ஆற்காடு சாலை, கணபதி நகர், போரூர், சென்னை–116. |
| | மாலை 4.00 மணி | அம்பத்தூர் | கே.எஸ்.பி. மகால், 12, காமராஜர் சாலை, கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 12-05-2025

கலைஞர் 100
1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி